# கலித்தொகை நெய்தற்கலியின் ஆற்றுதலென்பது பாடல் ஓர் உளவியல் பார்வை

**மு. முவின்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆர் வி எஸ் கலை அறிவியல் கல்லூரி, கோவை - 641402, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்** :

படைப்பாளன் தான் படைக்க விரும்பும் படைப்புகளில் பல உத்திகளைப் பயன்படுத்துகிறான். அவ்வாறு பயன்படுத்தும் உத்திகள், அப்படைப்பின் கருத்தை வெளிப்படுத்துவதில் மற்ற படைப்புகளை விட உயர்ந்து நிற்கின்றன அல்லது அக்குறிப்பிட்ட படைப்பினை தனித்துவப்படுத்திக் காட்டுகின்றன. சங்க காலக் கவிஞர்கள் ஐந்திணைக்கு ஏற்றவாறு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் நோக்கில் படைப்புகளை இயற்றியுள்ளது படைப்பாக்க உத்தியாகும். இவ்வாறு இயற்றிய பாடலினுள் இறைச்சி, உள்ளுறை உவமம் போன்றவற்றையும் பயன்படுத்தி அப்பாடலின் அழகை, அதன் ஆழத்தை அறிதல் என்பது படைப்பாளன் கைகளில் மட்டுமல்ல, அப்பாடலைப் படிப்பவரின் சிந்தனையிலும் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. சங்க இலக்கியத்தில், எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று சிறப்பிக்கப்படும் தகுதிப்பாட்டை உடையது. மேலும், கலிப்பாக்களால் ஆன காரணத்தால் கலித்தொகை எனும் பெயரை இந்நூல் பெற்றுள்ளது. ஐந்திணைகளுக்கும் பாடல் பெற்ற அகநூல் இது. ஐந்திணைகளையும் ஒவ்வொரு புலவர்கள் பாடியுள்ளனர். இதில் நெய்தல் கலியைப் பாடிய ஆசிரியர் நல்லந்துவனார். அவரே கலித்தொகையைத் தொகுத்தும் தந்துள்ளார். சங்க இலக்கியப் பாடல்கள் நேரடியாகக் கூற வந்ததை உணர்த்துதல் தவிர்த்து, மறைபொருளில் சில கருத்துக்களை உணர்த்துகின்றன. இவ்வாறு “ மாமலர் முண்டகம் எனத் தொடங்கும் புகழ்பெற்ற ஆற்றுதலென்பது எனும் நெய்தல் கலியின் 16 வது பாடல், ஊரலர் உச்சத்தில் உள்ள சமயத்தில், தலைவியின் துயரை, தோழி தலைவனுக்கு உலக நியதிகளை எடுத்துரைத்த செய்தியை விளக்குகிறது. தோழி கூறுவதாக நெய்தல்கலியின் ஆசிரியர் நல்லந்துவனார் அமைத்திருக்கும் தோழியின் உளவியல் சிந்தனையை, இப்பாடலின் பின்புலத்தில் உளவியல் ரீதியாக ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**குறிச்சொற்கள்** : தோழி, உளவியல், தலைவி, அறம், காதல்

**முன்னுரை** :

சங்க காலம், தமிழரின் வரலாற்றை, வாழ்வியலை விளக்கும் காலம். சங்க கால நூல்களே தமிழரின் பெருமைக்கு இன்றும் சான்றாக விளங்குகின்றன. சங்க கால வாழ்வில், அகமும், புறமும் ஆழ, அகல நிறைந்திருக்கின்றன. நற்றிணை தொடங்கி கலித்தொகை வரையிலான நூல்கள் எட்டுத்தொகை நூல்கள் என்றழைக்கப்படுகின்றன. இவை, காதலையையும், வீரத்தையும் பாடல்கள் வாயிலாக சங்க இலக்கியங்கள் பதிவு செய்துவைத்துள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை, குறிஞ்சி முதல் பாலை வரையிலான ஐந்து திணைகளுக்கும் அகவாழ்வின் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டு தனிப்பெரும் அகநூலாகத் திகழ்கிறது. கலித்தொகை நெய்தல்கலியின், அனைவரும் அறிந்த ஆற்றுதலென்பது பாடலில், தோழி தலைவனுக்கு அறம் எடுத்துரைக்கும் விதத்தில், அவளது உளவியல் நுட்பங்கள் ஆராய்தற்குரியன.

**கலித்தொகை - நெய்தற்கலி** :

எட்டுத்தொகையின் ஐந்து அகநூல்களுள் கலித்தொகையும் ஒன்று. நெய்தற்கலியை இயற்றியவர் நல்லந்துவனார். இவரே இந்நூலைத் தொகுத்தவர் ஆவார். நெய்தற்கலியில் 38 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நெய்தற்கலியானது கடல், கடற்கரை என இரண்டும் சார்ந்து வாழும் மக்களின் வாழ்வை விளக்குவதாகும்.

**“ கடலையும் வென்று, கடல் வளத்தையும் கொண்டு பயன்படுத்திய முயற்சித் திறன் மிக்கவரான மக்கள் இவர்கள் ”** [1] என்பது நெய்தல் நில மக்களின் வாழ்வை வெளிப்படுத்துகிறது. நெய்தல் திணையின் அழகே, இங்குள்ள மணல்மேடுகளும், கடற்சோலைகளும்தான். கடலில் கப்பல் செலுத்தி வாழும் தமிழர் பெருமைமையும், கடலில் பெறும் உப்பபையும், மீனையும் கொண்டு வாழ்வை வகுத்த திறத்தையும், காதல் நிலைகளையும் நெய்தல்கலியின் பாடல்கள் விளக்குகின்றன.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**உளவியல் கூறுகள்** :

சங்க இலக்கியங்கள் முழுமையாக உளவியல் கூறுகள் பொதிந்துள்ளன. இந்த உளவியல் கூறுகள் அக இலக்கியங்களில் மிகுந்தும், புற இலக்கியங்களில் சற்று குறைந்தும் காணப்படுகின்றன. இதனால் சங்க இலக்கியங்களை “

**உளவியல் இலக்கியங்கள்** ” [2] என்று குறிப்படுகிறார் தமிழண்ணல். உளவியல் உள்ளம் சார்ந்து இயங்குவது. “ **மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து, அதன்மூலம் அவை எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியல் ஆகும்** ” [3] அக இலக்கியங்களில் ஒவ்வொரு சொல்லும் கூட உளவியல் சிந்தனையை வெளிக்கொணரும் திறனுடையது. கூற்று முறையில் அமைந்த தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகியோரின் கூற்றுகள் அவரவர் சொல்ல வரும் கருத்தை எதிரே நிற்கும் மாந்தரிடம் உரைக்கும் பாங்கு அனைவரும் அறிந்ததாகும். இதில் கருத்துக்களை வெளிப்படுத்தும் கதாபாத்திரம், தாங்கி நிற்கும் உளவியல் மிகுதியாகும்.

**ஆற்றுதலென்பது பாடலின் பொருள்** :

தலைவியைப் பிரிந்து சென்றான் நெய்தல் நிலத் தலைவன் ஒருவன்; அதனால், தலைவி துயரமுற்று வாடுகிறாள் என்ற செய்தியை அறிந்த தோழி, தலைவனை நோக்கி, கவலையற்று இருக்கும் அவனிடம், உலக அறத்தை எடுத்துரைத்து, அவளது துயரைத் தீர்க்க, உடனே உன் தேரைப் பூட்டுவாயாக என்று வலியுறுத்துவது இப்பாடலின் பொருளாகும்.

**அறமுரைத்த விதம்** :

அறம் என்பது தருமத்தில் இருந்து வழுவாதிருத்தல், உண்மையுடன் நடத்தல் என நெகிழ்வுத் தன்மையுடையது அறம் என்பதை, “ **பசுக்களின் நிறம்பல, ஆனால் அவற்றின் பாலின் நிறம் ஒன்றுதான். அறநெறிகள் பல, ஆக்கம்பல, அறம் ஒன்றுதான்** “ [4] என்ற நாலடியாரின் கருத்தினைக் கொண்டு அறியலாம்.

தோழி, தலைவனுக்கு அறம் உரைப்பதாய் அமைந்த நெய்தற்கலின் பாடல் பின்வருமாறு,

**“ மாமலர் முண்டகம் தில்லையொடு ஒருங்குடன்**

**கானல் அணிந்த உயர் மணல் எக்கர்மேல்,**

**சீர்மிகு சிறப்பினோன் மாமுதல் கைசேர்த்த**

**நீர்மலி கரகம்போல் பழம்தூங்கு முடத்தாழைப்**

**பூ மலர்த்தவை போல், புள் அல்கும் துறைவ ! கேள் "** [5]

இப்பாடலில், கடற்கரையில் மணல்மேடுகள் உயர்ந்து விளங்கின என்றும், அழகுநிறைந்த அம்மணல் மேட்டில் கருநீல மலர்களும், சுழிமுள்ளிகளும், தில்லை மலர்களும் பூத்துக் குலுங்கின. சீர்மிகுந்த சிறப்பினை உடைய சிவபெருமான், ஆலமர நிழலில் சனகாதி முனிவர்களுக்கு அறம் உரைக்கும்போது, கொணர்ந்து வைத்திருந்த நீர் நிறைந்த கரகம் போல, தாழையில் பழங்கள் வளைந்த மடல்களில் தூங்கிக் கொண்டிருந்தன. அந்தத் தாழையில் பூ மலர்ந்தது போல், அந்த மடல்களில் கடல்நாரை ஒன்றும் அமர்ந்திருந்தது. அங்கே தலைவி ஊரலரால் துயருற்றிருக்கும் நிலையில், நீயோ, தாழை மலர் மீது ஒய்யாரமாய் அமர்ந்திருக்கும் கடல்நாரையைப் போல கவலையற்று இருக்கின்ற தலைவனே ! நான் உரைப்பதைக் கேள் என்கிறாள் தோழி. தோழி தான் அறமுரைக்க வந்திருக்கிறேன் என்ற செய்தியை கவலையற்று இருக்கும் தலைவனுக்கு, ஆலமர நிழலில் அறமுரைத்த சிவனைக் குறிப்பிட்டு முன்பே உணர்த்துகிறாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உலக அறங்களும் - தோழியின் உளவியலும்** :

தலைவியைக் காதல் செய்து அவளைக் களவில் நுகர்ந்து, இப்போது ஏதும் அறியாதவனாய், தலைவியின் துன்பத்தைப் புரியாதவன் போல இருக்கிறான் தலைவன், அவனை நோக்கி, ஆற்றுதல் என்றால் என்ன என்பதில் தொடங்கி, பொறை எனப்படுவது யாது என்ற உலக அறங்களை உரைக்கிறாள் தோழி.

" **ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்**;

**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**;

**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**;

**அன்பு எனப்படுவது தன் கிளை செறாஅமை**;

**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**;

**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை**;

**நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை;**

**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்;**

**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் "** [6]

இப்பாடலின் வரிகளை நேரடியாக நோக்கின், தலைவனுக்கு உலக அறங்களை வலியுறுத்துவதாகத் தோன்றும். நுணுகி ஆராயின், தோழியின் உளவியலானது பின்வருமாறு வெளிப்படும்.

ஆற்றுதல் என்பது உதவி என்று கேட்டு வருபவர்க்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்தல் என்ற அறத்தை முதலில் உரைக்கிறாள் தோழி, இதன் உளவியல் பின்னணியில் தோழி சொல்ல வரும் செய்தியானது, நான் உன்னிடம் தலைவியை விரைவில் சந்தித்து அவளது துயரைத் தீர்க்க வேண்டும் என்ற உதவியை கேட்டு வந்திருக்கிறேன். இல்லையென்று சொல்லாமல் அவ்வுதவியை நீ செய்ய வேண்டும் என்று மறைமுகமாகக் குறிப்படுகிறாள்

அடுத்த வரியில், மிகச் சரியாக தான் என்ன காரணத்திற்காக வந்துள்ளேன் என்பதைத் தோழி வெளிப்படுத்துகிறாள். போற்றுதல் என்பது களவு காலத்தில், புணர்ந்தவரைப் பிரியாதிருத்தல். நடந்த, மறுக்க முடியாத உண்மையைக் கேட்கும்போது, தலைவனது உள்ளம் கணக்கும். கவலையற்று இருக்கும் தலைவனது உள்ளத்தில் ஒரு தடுமாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே , புணர்ந்தாரைப் பிரியாமல் இருப்பவர்களையே இந்த உலகம் போற்றும் என்று தான் என்ன செய்தி சொல்ல வந்துள்ளோம் என்பதை உணர்த்துகிறாள்.

தலைவன் காதல் வாழ்வில் பண்பற்றவன் என்ற சிந்தனையை அவனுக்குள் முதலில் புகுத்தி, அடுத்த வரியில் பண்பைப் பற்றிப் பேசுகிறாள். பண்பு என்பது ஒருவரது நிலையை அறிந்தது அதற்கு ஏற்றாற்போல் நடத்தல், ஆனால் தலைவனாகிய நீயோ தலைவியின் நிலையை அறியாமல் நடக்கிறாய் என்று மறைமுகமாய் உணர்த்துகிறாள்.

பழகிய சுற்றத்தினரைக் கோபியாதிருத்தலே அன்பு. ஆனால், நீயோ தலைவியின் மீது ஏதோ கோபம் கொண்டு பேசாமல் இருக்கின்றாய் இது அன்பு அல்ல என்று தோழி உணர்த்துகிறாள். இக்கருத்தையொட்டிய திருக்குறள் பின்வருமாறு,

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு ”** [7]

இக்குறளானது, அன்பின் வழிநின்ற உடம்பே உயிருள்ள உடலென்றும், அன்பற்றவரின் உடல் எலும்பைத் தோல் போர்த்தியுள்ள வெற்றுடம்பே ஆகும் என்கிறது.

ஒருவேளை தலைவன் சிலவற்றைப் பொறுத்துக்கொள்ளாமல் தோழியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கும் சூழலில், தோழி தலைவனிடம் பின்வருமாறு உரைக்கிறாள். ஊரலராய் ஊரில் பலரும் பேதைத்தனமாய் காதலைப் பற்றி, தலைவியைப் பற்றி உன் செவிபட எத்தனையோ உண்மைக்கு மாறான விடயங்களைப் பேசியிருக்கலாம். அப்படி, அறிவற்றோர் பேசிய சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல் அறிவாகும். எதையும் பொறுத்துக் கொள்ளாது வாதத்தில் ஈடுபடுதல் அறிவு ஆகாது என்று மறுமொழியுரைக்கிறாள்.

களவு காலத்தில் தான் கூறிய வார்த்தைகளை, உதாரணமாய், தலைவியிடம் உன்னைத் திருமணம் செய்வேன், உன்னை என்றும் மறவேன் என்று கூறியதையெல்லாம் இப்போது மறந்துவிட்டு வாழ்கிறாய். இது செறிவு அல்ல, கூறியது மாறாது வாழ்தலே செறிவு என்கிறாள் தோழி.

வாழ்வில் மறைந்திருக்க வேண்டிய விடயங்கள் மறைந்துதான் இருக்க வேண்டும் அதுவே நிறை. ஆனால், மறைந்திருக்க வேண்டிய தலைவன், தலைவயினது களவு வாழ்வு இன்று ஊரலராய் காற்றில் பறக்கிறது இதற்குக் காரணம் தலைவியைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்ற தலைவனாகிய நீ தான் என்று உரைக்கிறாள் தோழி.

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறைஎன்று வைக்கப் படும்.”** [8]

என்ற குறளானது, முறைசெய்து காக்கும் தலைவன் இறைவனென்று போற்றப்படுவான் என்கிறது. தலைவனை நோக்கித் தோழி, குற்றம் செய்தவனை வேண்டியவன், வேண்டாதவன் என்று கண்ணோடாது அவனது உயிரைப் பறித்தலே முறை என்கிறாள். ஆனால், கண்ணோடி கண்பார்த்துப்

பழகி, பின்னர் அவளைப் பிரிந்து தனிமைத் துயரால் அவளது உயிரைப்பறித்தல் முறையல்ல என்று மறைமுகமாய் உரைக்கிறாள்.

இறுதி அறமாய், பொறை என்பது போற்றாரைப் பொறுத்தல் என்கிறாள். தான் அறமுரைத்த நேரம், ஒரு இடத்தில் கூட உன்னைப் போற்றவேயில்லை தலைவனே, உன்னைப் போற்றாத என்னையும் நீ பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற உளவியலை தலைவனுக்குள் புகுத்துகிறாள். உலக அறங்களை தலைவனுக்கு எடுத்தியம்பிய நோக்கில், தோழியின் உளவியல், தலைவன், தலைவி, தோழி என்ற மூவரைச் சுற்றியே சுழல்கிறது என்பதை மேலும் உறுதி செய்யும் விதமாக தலைவியின் துயரை தலைவனுக்கு நேரடியாக எடுத்துரைக்கும் ஆற்றுதலென்பது பாடலின் இறுதிவரிகள் பின்வருமாறு,

**“ ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின், என் தோழி**

**நல்நுதல் நலன்உண்டு துறத்தல் - கொண்க !**

**தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்;**

**நின்தலை வருந்தியாள் துயரம்**

**சென்றனை களைமோ; பூண்க, நின் தேரே ”** [9]

தான் உலக அறங்களை உரைப்பதுபோல், தனது கருத்துக்களை உளவியல் ரீதியாக தலைவனது சிந்தைக்குள் உட்புகுத்திவிட்டு, சொல்லிய அறங்களை அறிந்தவர் ஆயின், மேலும் யான் கூறுவதைக் கேளுங்கள் என்று கூறி, தலைவியின் அழகை அனுபவித்துவிட்டு, அவளைக் கைவிட்டு மறந்திருத்தல் என்பது, பசியின்போது இனிய பாலுண்பவர்கள், பால் நிறைந்திருக்கும் கலத்தைக் கவிழ்த்து அழித்தலைப் போன்ற அறியாமையாகும். நின் காரணமாக வருந்தியவளின் துயரம் தீர வேண்டுமாயின், மறுமொழி உரைப்பதற்கு ஒன்றுமில்லை, அதை நீ நேரில் சென்றுதான் தீர்க்க இயலும். தேரைப் பூட்டி விரைவாகச் செல் என்கிறாள் தோழி.

**முடிவுரை :**

கலித்தொகையின் நெய்தற்கலியின் ஆற்றுதலென்பது பாடல், தலைவியின் துயரைத் தீர்க்க தோழி, தன் அறிவின் நிலையில் உலக அறங்களைத் தொட்டு, தலைவியின் நிலையை உரைத்த உளவியலின் உச்சம் எனலாம். தலைவியின்

துயரைத் தலைவனுக்கு எடுத்துரைக்க வந்த தோழி, பாடலின் தொடக்கத்தில், ஆலமர நிழலில் அறம் உரைத்த சிவனைக் குறிப்பிட்டு, இடையில் உலக அறங்களை தலைவனின் உளவியலுடன் பொருத்தி, இறுதியில் பாலுண்ணும் பாத்திரத்தைக் கொட்டிக் கவிழ்த்தல் முறையல்ல என்று தலைவியின் நிலையை தலைவனுக்கு உணர்த்தியுள்ள நயம் நோக்கத்தக்கதாகும்.

**அடிக்குறிப்புகள்** :

1. புலியூர்கேசிகன், கலித்தொகை (மூஉ), ப 286
2. தமிழண்ணல், சங்கஇலக்கிய ஒப்பீடு இலக்கியக்கொள்கைகள், ப 28
3. நாகராசன் க, கல்வி உளவியல், ப 65
4. இராசாராம் துரை, பதினெணகீழ்க்கணக்கு, ப 115
5. புலியூர்கேசிகன், கலித்தொகை (மூஉ), ப 318
6. மேலது, ப 319
7. டாக்டர் மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, ப 81
8. மேலது, ப 81
9. புலியூர்கேசிகன், கலித்தொகை (மூஉ), ப 319

**துணைநூற்பட்டியல்** :

1. இராசாராம் துரை, பதினெணகீழ்க்கணக்கு, முல்லை நிலையம், 1996, சென்னை
2. டாக்டர் மு. வரதராசனார், திரூக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு, 2004, சென்னை
3. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், 1978, மதுரை
4. நாகராசன் க, கல்வி உளவியல், ராம் பதிப்பகம், 2001, சென்னை
5. புலியூர்கேசிகன், கலித்தொகை (மூஉ), சாரதா பதிப்பகம், 2012, சென்னை